(**2025-26-**ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2 )

**SUBJECT CODE 25 UTM 203**

**REG.NO:**

என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) :: பொள்ளாச்சி

பருவ இறுதித் தேர்வுகள் : மே - 2026

பி. ஏ. தமிழ் இலக்கியம் — மதிப்பெண்கள் : 75

இரண்டாம் பருவம் — நேரம் : 3 மணி

## பகுதி – 3

## நன்னூல் எழுத்ததிகாரம்

### பகுதி – அ (10x1=10 மதிப்பெண்கள்)

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (K1)

1. நன்னூலின் ஆசிரியர் யார்?
   அ) பவணந்தியார் ஆ) சோம இளவரசு இ) சுபாஷ் சந்திர போஸ் ஈ) சேதுராமன்
2. உத்திகள் எத்தனை வகைப்படும்?
   அ) 10 வகைப்படும் ஆ) 30 வகைப்படும் இ) 32 வகைப்படும் ஈ) 26 வகைப்படும்
3. மேற்பல்லின் அடிப்பாகத்தை நாக்கின் நுனி பொருந்துவதால் பிறக்கும் எழுத்துக்கள் யாவை?
   அ) த, ந ஆ) ப, ம இ) அ, ஆ ஈ) உ, ஊ
4. வினைச்சொல்லின் இறுதியில் அமையும் சொல் பகுதி யாது?
   அ) பகுதி ஆ) இடைநிலை இ) சாரியை ஈ) விகுதி
5. இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் மிகும் மெய் எழுத்துக்கள் யாவை?
   அ) த ந ப ம ஆ) க ச ட ண இ) ப ய ர ல ஈ) க ச த ப

**கீழ்க்காணும் அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.** (K2)

6. பாயிரம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
7. மெய் எழுத்துக்கள் எத்தனை வகைப்படும்? விளக்குக.
8. பதம் என்றால் என்ன?
9. வேற்றுமை உருபுகள் யாவை? விளக்குக.
10. மெய்யீற்றின் முன் உயிர் இணைவதை சான்றுடன் விவரிக்க.

### பகுதி – ஆ ( 5 X 5 = 25 மதிப்பெண்)

**அனைத்து வினாக்களுக்கும் இரண்டு பக்க அளவில் விடையளிக்கவும்.** **(K3)**

11. அ) நூலின் வகை குறித்துச் சான்றுடன் எழுதுக.

**(அல்லது)**

ஆ) நூலில் தவிர்க்க வேண்டிய பத்துவகைக் குற்றங்கள் யாவை?

(த.பி.பா.)

*ETHICAL PAPER*

12. அ) அளபெடையை வகைப்படுத்தி விளக்குக.

**(அல்லது)**

ஆ) போலி என்றால் என்ன? சான்றுடன் எடுத்துரைக்க.

13. அ) ஓரெழுத்து ஒரு மொழியை இயம்புக.

**(அல்லது)**

ஆ) பகுபதம், பகாப்பதம் விளக்குக.

14. அ) விகாரப் புணர்ச்சியின் இலக்கணம் யாது?

**(அல்லது)**

ஆ) நாழி,உரி என்பதற்குச் சிறப்பு விதி கூறுக.

15. அ) தமிழ், தாழ் என்பவற்றிற்குச் சிறப்பு விதி யாது?

**(அல்லது)**

ஆ) திசைப்பெயரைச் சிறப்பித்தெழுதுக.

**பகுதி – இ ( 5 X 8 = 40 மதிப்பெண்கள் )**

**அனைத்து வினாக்களுக்கும் கட்டுரை வடிவில் விடையளிக்கவும். (K4 (Or) K5)**

16. அ) நூலைக் கற்பிக்கும் ஆசிரியரின் பண்பு நலன்களைக் கட்டுரையாக்குக.

**(அல்லது)**

ஆ) மாணாக்கர் வரலாறு குறித்து நன்னூல் வழி விவரிக்க.

17. அ) சார்பெழுத்தின் வகைகள் குறித்து விளக்குக.

**(அல்லது)**

ஆ) மொழி முதல் எழுத்துக்கள், மொழி இறுதி எழுத்துக்களைத் தொகுத்துரைக்க.

18. அ) பகுபத உறுப்புக்களைக் கட்டுரை வரைக.

**(அல்லது)**

ஆ) வடமொழி ஆக்கம் என்றால் என்ன? அது தமிழில் பெறும் இடம் குறித்து எடுத்துரைக்க.

19. அ) புணர்ச்சியின் பொது இலக்கணம் கூறி அல்வழி, வேற்றுமைப் புணர்ச்சியை விவரி.

**(அல்லது)**

ஆ) எண்ணுப்பெயர்க்கான சிறப்பு விதியைச் சான்றுடன் விவரிக்க.

20. அ) ணகர, னகர ஈற்றுப் புணர்ச்சியை ஆய்க.

**(அல்லது)**

ஆ) லகர, ளகர ஈற்றுப் புணர்ச்சியைச் சான்றுடன் எடுத்துரைக்க.